ஏன் சிறந்தவர்களிடமிருந்து பிறர் கற்றுக்கொள்ள வேண்டும்!

1990 ஆம் ஆண்டு, இந்தியாவில் தனிநபர் வருவாய் 368 டாலர்களாகவும், . சீனாவின் தனிநபர் வருவாய் 318 டாலர்களாகவும் ஏறத்தாழ ஒரே நிலையிலிருந்தது. 1970களின் பிற்பகுதியில் சீனா தாராளமய மாக்கலைத் தொடங்கியிருந்தாலும், அதன் வளர்ச்சி உச்சக் கட்டத்தை இன்னும் அடையவில்லை. ஆனால் அடுத்த 30+ ஆண்டுகள் மிகத் தெளிவாகச் சீனாவின் காலமாக இருந்தது. உலகளாவிய உற்பத்தி, வர்த்தகம் மற்றும் நாணய கையிறுப்புகளில் அதிகரித்த அந்நாட்டின் ஆதிக்கம், வரலாற்றிலே மிகப் பெரிய செல்வ வளத்தை உருவாக்கியது. சீனாவின் தனி நபர் வருமானம் $12,614 ஆக உயர்ந்துள்ளது, இது இந்தியாவின் தற்போதைய $2,480 என்ற நிலையை விட ஐந்து மடங்கு அதிகம்.

நாம் இப்போது ஒரு புதிய யுகத்தில் நுழைகிறோம், ஒரு தெளிவான கொள்கையும், சுறுசுறுப்பான நிலைப்பாடும் இந்தியாவுக்கு அடுத்த சில சகாப்தங்களில் வியக்கத்தக்க அளவிற்கு வளர்ச்சியையும் செழிப்பையும் ஒரு சீராக உருவாக்க முடியும். உலகளாவிய பொருளாதாரத்தில் சீனாவின் பங்களிப்பு அதன் முதுமை பெறும் மக்கள் தொகை காரணமாகவும், உலக முதலீட்டாளர்களும் வர்த்தக பங்களிப்பாளர்களும் சீனாவை மட்டுமே சார்ந்து இருப்பதால் உண்டாகும் ஆபத்தைத் தீவிரமாகக் குறைக்க முயல்வதாலும், இந்தியா உலக பொருளாதாரத்திற்கே ஒரு புதிய எந்திரமாக உருவாக முடியும்.

நாம் அதற்கான அத்தியாவசிய வளங்களை வைத்திருக்கிறோம் மிகப்பெரிய அளவிற்கு இளைமைமிக்க மனித வளம் , உலகளாவிய பொருளாதார ஒருங்கிணைப்பு திறன் (குறிப்பாக ஆங்கிலம் மூலம்) அத்தோடு உள்நாட்டு நுகர்வைப் பன்மடங்கு பெருக்கல் விளைவை உருவாக்கும் அளவிற்காக மக்கள் தொகை . நாட்டின் பொருளாதாரம் இல் இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டும் அளவிற்கு நமது தனிநபர் உற்பத்தித் திறனை உருவாக்க, நாம் ஒருங்கிணைந்த உலக சந்தையின் தேவைக்குப் பொருத்தக் கூடிய திறன் பயிற்சியைக் கோடிக் கணக்கான திறம் மிக்க இளம் இந்தியர்களுக்கு வழங்க வேண்டும். இந்தியா முழுவதும் இத்தகைய விளைவுகளை உருவாக்குவதற்குச் சிறந்த வழி, தமிழ்நாடு போன்ற சிறந்த செயல்பாடு கொண்ட மாநிலங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டது, மோசமான விளைவுகளைக் கொண்ட மாநிலங்களில் அந்த கொள்கைகளையும், நடைமுறைகளையும் செயல்படுத்தி அதன் மூலம் ஒட்டுமொத்த தேசிய சராசரியை மேம்படுத்துவதே ஆகும்.

சிறந்தவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டவற்றை மற்ற இடங்களில் பயன்படுத்துவதற்குப் பதிலாக, ஒன்றிய அரசு வளர்ந்த தென் மாநிலங்கள் மீது ஒரே மாதிரியாக்கும் நிகழ்ச்சி நிரலைத் திணிக்க முயல்வது புரிந்துகொள்ளவில்லை, இதனால் தேசிய சராசரி குறையும் அபாயம் உள்ளது, ஏனெனில் தோல்வியடைந்த மாதிரிகள் வெற்றிகரமான மாநிலங்களின் மீது திணிக்கப்படுகின்றன. இதற்கு மாறாக மாறாக, ஒன்றிய அரசு அதிக மக்கள் தொகை, அதிக பிறப்பு விகிதம் கொண்ட வட மாநிலங்களில் நமது இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிப்பதில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும், ஏனெனில் அவர்கள் தேசிய சராசரியை விட மிகவும் பின்தங்கியுள்ளனர். அவர்களின் தவறாக இலக்கைக்கொண்ட அவர்களின் கவனம் முழுவதுமே மக்களின் வாழ்க்கைத் தரத்தை, வாழ்வாதாரத்தை உண்மையில் மேம்படுத்துவதற்குப் பதிலாக பன்மைத்துவம் மிக்க அடையாளங்களை ஒடுக்கி 'ஒரே நாடு, 1.4 பில்லியன் மக்களுக்கு ஒரே நிலைப்பாடு' என்ற பிழையான , நிலையற்ற அரசியல் சித்தாந்தத்தில் மையம் கொண்டுள்ளது. ஆட்சி நிர்வாகத்திற்கு உள்ள பொறுப்புகளுக்கு மேலாக அரசியல் லட்சியத்தையே முன்னுரிமைப்படுத்துவது, பொருளாதார பேரழிவு எனும் அபாயத்தை உருவாக்குகிறது.

நான் மீண்டும் சொல்கிறேன் ஒன்றிய அரசின் முதன்மையான முன்னுரிமை என்பது குறிப்பாக அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலங்களில் சுகாதார மற்றும் கல்வி விளைவுகளை உயர்த்துவதாக இருக்க வேண்டும், அந்த மாநிலங்கள் இப்பருன்மைகளில் தமிழ்நாட்டை விடப் பரிதாபகரமாகப் பின்தங்கி யுள்ளன. இவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதைப் புறக்கணிப்பதில் மேலும் கவலை அளிப்பது என்னவென்றால், இப் பின்தங்கிய மாநிலங்களான உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிவை பெரிதும் விளம்பரப்படுத்தப்பட்ட 'இரட்டைஇயந்திர அரசுகள்' ஆல் ஆளப்படுகின்றன. இந்தியாவின் எதிர்காலம் பிரகாசமாக இருக்க வேண்டுமெனில், அனைத்து மாநிலங்களிலும் குழந்தைகள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும். எனவே, தமிழ்நாட்டில் உள்ள நாங்கள் இந்த பகுதிகளில் சிறந்த விளைவுகளை உண்டாக்க ஏங்குகிறோம், பல தசாப்தங்களாக தொடர்ந்து அதிகமான நிதி வளங்கள் உட்செலுத்தப்பட்ட

No two languages are ever sufficiently similar to be considered as representing the same social reality — Edward Sapir

MONDAY 17.03.2025 THE NEW INDIAN EXPRESS newindianexpress.com

Instead of implementing successful policies from developed southern states like Tamil Nadu in the northern ones, the Centre wants to homogenise. This could be economically catastrophic

WHY THE REST SHOULD LEARN FROM THE BEST

PALANIVEL THIAGA RAJAN — Minister of Information Technology and Digital Services, Tamil Nadu

IN 1990, India, with a per capita income of $368, and China, with $318, stood on the same ground. Though China had started liberalising in the late 1970s, its growth had not reached peak acceleration yet. But the ensuing 30+ years were clearly China's era, as its increasing dominance in global manufacturing, trade and currency reserves resulted in probably the greatest wealth creation in history. China's per capita income has surged to $12,614—about five times India's current level of around $2,480.

We are now entering a new era, one in which enlightened policy and nimble positioning can produce a few decades of similarly stunning growth and prosperity for India. As China's role in the global economy declines due to an ageing population, and as global investors and trading partners actively de-risk their China exposure, India can become the new engine of growth for the global economy.

We possess the essential ingredients—the largest pool of young human capital, the capacity for global economic integration (not least through English), and the demographic dividend that can lead to the multiplier effects of increasing domestic consumption. To enhance our per capita productivity, which can yield sustained double-digit growth rates, we must equip millions of young Indians with skills for the integrated global market. The best way to achieve such outcomes throughout India is to extract lessons from the best performing states such as Tamil Nadu, and replicate these policies and practices in states with poorer outcomes, thereby improving the national average.

Instead of applying from the best to the rest, it is unfathomable that our Union government has become fixated on pushing a homogenising agenda on the developed south, thereby risking a decline in the national average, as failed models are thrust upon successful states. Instead, it should be focused almost exclusively on the vital priority of securing the future of our younger generations in the highly populated, high-fertility states of the north, which are the farthest behind the national average. Their wholly misdirected focus appears centred on an ephemeral political ideology that seeks to subjugate diverse identities into a 'One nation, One profile for 1.4 billion people' fallacy, instead of actually improving people's lives and livelihoods. Such prioritisation, of political ambition over core governance responsibilities, creates the risk of an economic catastrophe.

I repeat—the Union government's foremost priority should be elevating health and educational outcomes, particularly in highly populated states where these metrics lag woefully behind Tamil Nadu's. What makes the neglect of this priority more troubling is that these underperforming states—Uttar Pradesh, Bihar, Madhya Pradesh, Rajasthan—are governed by the much-flaunted 'double-engine sarkars'. If India's future is to be bright, children across all states must thrive equally. So, we in Tamil Nadu yearn for better outcomes in these regions, where tangible results remain elusive despite the ever-increasing infusion of resources for decades.

The disparity between these states and Tamil Nadu is not merely economic—it is social too. Rather than dictating terms to Tamil Nadu, the Centre would be better served learning how to bridge these gaps through improved healthcare access, promoting greater inclusivity (education for girls, in particular), reducing dropout rates, enhancing skill development, and encouraging higher education.

Instead, they have chosen a path of coercion—threatening Tamil Nadu and holding it hostage by withholding rightful funds—perhaps to distract from their own governance failures? This approach is self-defeating. Anyone who comprehends the broader socio-economic canvas will understand why Tamil Nadu stands at the forefront of resistance—opposing disproportionate delimitation, rejecting the three-language formula, and challenging the systematic erosion of states' rights in our federal structure.

Of particular concern is the proposed delimitation exercise, which strikes at the heart of fair representation. The principle of 'no taxation without representation' seems conveniently forgotten. Despite contributing disproportionately higher taxes to the national exchequer, our state faces the prospect of having its proportional share of parliamentary representation reduced. Having successfully implemented population control measures decades ago as a responsible national policy, we now face being penalised. This would squeeze our voice in national affairs, effectively punishing good governance and demographic responsibility. We are being asked to pay more while having less say—a proposition that no self-respecting democracy should consider.

The Centre's obduracy suggests they are unwilling to learn from successful models. The benefits accrued by Tamil Nadu's adoption of the two-language formula are unmistakably evident. As is the storied history of our state's fierce opposition to having any educational policy (or Hindi) blatantly or surreptitiously imposed upon us. This legacy is in the identity of the Dravidian movement from the days of the Justice Party. Our history is replete with iterations of resistance: from the 1930s and 60s to the late 80s. The Tamils are not people who will buckle under strongarm tactics.

Chief Minister M K Stalin remains resolutely committed to defending our state's rights, our language and, above all, the future of our younger generations. He has approached this campaign through democratic means—convening an all-party meeting to garner support from every quarter and to channel the prevailing sentiment. He has called for a multi-state conference to form a joint action committee to address these issues with a broad coalition. If the Union government believes that Tamil Nadu will stand politically isolated, they have fundamentally misread the mood of the nation.

It is heartening that the BJP has demonstrated astonishing elasticity when political expediency has required it. For instance, though the prime minister embarked on a welfare-bashing spree denouncing a "revdi culture" in 2023, his party has since been doing exactly what he condemned, in state election after election. In a remarkable yet unsurprising u-turn, they have cloned Tamil Nadu's model of the Magalir Urimai Thogai repeatedly, promising even higher monthly payouts than Tamil Nadu in Maharashtra and Delhi. Imitation is the sincerest form of flattery.

We remain hopeful that the habit of absorbing lessons from Tamil Nadu will continue, and result in the profound societal and policy reforms that must be implemented to improve educational and health outcomes in the large, 'double-engine' northern states. More than any other measure, our country's future depends on how the youth of these states prosper.

(Views are personal)

போதிலும், நல்ல விளைவுகள் இங்கு இது வரை உண்டாகவில்லை.

இந்த மாநிலங்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான வேறுபாடு பொருளாதார ரீதியாக மட்டுமல்ல அது சமூக ரீதியாகவும் உள்ளது. தமிழ்நாட்டிற்கு விதிமுறைகளைத் திணிப்பதற்குப் பதிலாக, ஒன்றிய அரசு மேம்பட்ட சுகாதார அணுகலை ஊக்குவிப்பது, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பது (குறிப்பாகப் பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பது), கல்வி இடைநிற்றல் விகிதங்களைக் குறைப்பது, திறன் மேம்பாட்டை மேம்படுத்துவது, மற்றும் உயர் கல்வியை ஊக்குவிப்பது ஆகியவற்றின் மூலமாக இந்த இடைவெளிகளை எவ்வாறு சரி செய்

முனைவர் பழனிவேல் தியாகராஜன்
தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் அமைச்சர்

வது என்பதைக் கற்றுக்கொள்வதன் மூலம் சிறப்பாகச் செயல்பட முடியும்.

ஆனால் அதற்கு மாறாக, அவர்கள் வற்புறுத்தல் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளனர் தமிழ்நாட்டை அச்சுறுத்துவது, அதன் உரிமையுள்ள நிதிகளைத் தடுத்து வைப்பதன் மூலம் ஓர் பணயக்கைதி போல நடத்துவது, போன்றவை ஒருவேளை அவர்களின் சொந்த நிர்வாகத் தோல்விகளிலிருந்து கவனத்தைத் திசைதிருப்புவதற்காகவா? இந்த அணுகுமுறை அவர்களுக்கே தோல்வியை ஏற்படுத்துகிறது. பரந்த சமூகபொருளாதார பின்னணியைப் புரிந்து கொள்ளும் எவரும் நியாயமற்ற பிரதிநிதித்துவத்தை உண்டாக்கும் தொகுதி மறுவரையறை எதிர்ப்பது, மூன்று மொழி திட்டத்தை நிராகரிப்பது, மற்றும் நமது கூட்டாட்சி அமைப்பில் மாநிலங்களின் உரிமைகள் மறுக்கப்படுவதை எதிர்ப்பது ஆகிய எதிர்ப்புகளின் முன்னணியில் தமிழ்நாடு ஏன் நிற்கிறது என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

குறிப்பாக, நியாயமான பிரதிநிதித்துவத்தின் மையத்தைத் தாக்கும் முன்மொழியப்பட்ட 'மறுவரையறை நடவடிக்கை' பற்றிய கவலை எங்கள் மனதில் எப்பொழுதுமே இருந்து வருகிறது. 'பிரதிநிதித்துவம் இல்லாமல் வரி இல்லை' என்ற கொள்கை மறக்கப்பட்டுவிட்டது போலேயே தெரிகிறது. தேசிய பொருளாதாரத்திற்கு, மற்ற மாநிலங்களை விட அதிகப்படியான வரியைப் பங்களித்த வருகிறபோதிலும், எங்கள் மாநிலம், பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தில், அதன் விகிதாச்சார பங்கு குறைக்கப்படும் அபாயத்தை எதிர்கொள்ளவேண்டியிருக்கிறது.

பல ஆண்டுகளுக்கு முன்பு, பொறுப்புணர்வு மிக்க தேசிய கொள்கையான மக்கள் தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டதற்காக நாங்கள் இப்பொழுது தண்டிக்கப்படுகிறோம். எங்களின் நிர்வாகத்திறனையும், பொறுப்புணர்வையும் தண்டிக்கும் விதமாக, இந்நடவடிக்கை, தேசிய விவகாரங்களில், எங்களின் குரலைச் சுருக்கிவிடும். எந்த ஒரு சுயமரியாதை கொண்ட ஜனநாயகமும் ஏற்றுக்கொள்ளக்கூடாத 'அதிகமான வரிப்பகிர்வையும் குறைவான பிரதிநிதித்துவத்தையும்' நாங்கள் கொண்டிருக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள்.

ஒன்றிய அரசின் இந்த பிடிவாதம், வெற்றிகரமான மாதிரிகளிலிருந்து அவர்கள் கற்றுக் கொள்ள விரும்புவதில்லை என்பதையே குறிக்கிறது. இருமொழியைக்கொள்கையை அமல்படுத்தியதன் மூலம் தமிழ்நாடு பெற்ற பலன்கள், பொதுவெளியில் தெளிவாகவே உள்ளது. அதுபோலவே, எந்தவொரு கல்விக் கொள்கையும் (அல்லது இந்தியை) வெளிப்படையாகவோ அல்லது ரகசியமாகவோ திணிக்கப்படுவதைக் கடுமையாக எதிர்த்த வரலாறும் எங்கள் மாநிலத்திற்கு உண்டு. இந்த பாரம்பரியம், நீதிக்கட்சி காலத்திலிருந்தே, திராவிட இயக்கத்தின் அடையாளத்தில் ஒரு அங்கமாக இருந்துவருகிறது. 1930' களிலும், 60' களிலும், 80' களின் பிற்பகுதிகளிலும் நடைபெற்ற இதுபோன்ற பல்வேறு போராட்டங்களால் எங்கள் வரலாறு நிரம்பியுள்ளது. அடக்குமுறை தந்திரங்களுக்குத் தமிழர்கள் எப்போதும் அடிபணிந்ததில்லை.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நமது மாநில உரிமையையும், நமது மொழியையும், எல்லாவற்றிற்கும் மேலாக, நமது இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தை பாதுகாப்பதிலும் மிக உறுதியாக உள்ளார். அவர் இப்பிரச்னையை, ஜனநாயக முறையில் அனைத்து தரப்பிடமிருந்தும் ஆதரவைப் பெற்றும், நாடெங்கும் பரவலாக உள்ள இந்த மனநிலையை ஒருங்கிணைத்து வழிநடத்துவதற்காக அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டுவதும் என அணுகியுள்ளார். இந்த பிரச்சினைகளை ஒரு வலிமையான கூட்டணியுடன் எதிர்கொள்ள ஒரு பல்மாநில மாநாட்டை கூட்டி, ஒரு கூட்டு நடவடிக்கை குழுவை உருவாக்கியுள்ளார். தமிழ்நாடு அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தப்படும் என்று ஒன்றிய அரசு நம்பினால், அவர்கள் தேசத்தின் மனநிலையை தவறாக புரிந்து கொண்டுள்ளனர்.

பிஜேபி, தனது அரசியல் லாபங்களுக்காக, ஆச்சரியபடத்தக்க வகையில், நெகிழ்வுத்தன்மையை வெளிப்படுத்திவருவது, வேடிக்கையாக இருக்கிறது. உதாரணமாக, பிரதமர் அவர்கள், 2023 ஆம் ஆண்டு, மக்களுக்கான எங்கள் நலத்திட்டங்களை "ரேவ்டி கலாச்சாரம்" என்று கடுமையாக விமர்சித்த போதிலும், அவரது கட்சி, ஒவ்வொரு மாநில தேர்தலிலும், அவைகளையே தொடர்ந்து ஆதரித்து வருகின்றனர். பெரிதும் ஆச்சரியம் இல்லாத, ஆனால், குறிப்பிடத்தக்க ஒரு விடயம் என்னவெனில், அவர்கள் தமிழ்நாட்டின் 'மகளிர் உரிமை தொகை' மாதிரியை மகாராஷ்டிராவிலும் டெல்லியிலும் பின்பற்றி, தமிழ்நாட்டை விட அதிக மாதாந்திர தொகையை வாக்குறுதியாக அளித்துள்ளனர். பின்பற்றுதல் என்பது மிக உயர்ந்த புகழ்ச்சியின் வடிவமாகும்.

தமிழ்நாட்டிலிருந்து நல்ல திட்டங்களை உள்வாங்கும் அவர்களின் இந்தப் பழக்கம் தொடரும் என்றும், வடக்கு மாநிலங்களில் உள்ள பெரிய, 'இரட்டை இயந்திர' மாநிலங்களில் கல்வி மற்றும் சுகாதார விளைவுகளை மேம்படுத்த வேண்டிய சமூக மற்றும் கொள்கை சீர்திருத்தங்களை இது விளைவிக்கும் என்றும் நாங்கள் நம்புகிறோம். வேறு எந்த நடவடிக்கைகளை விடவும், இந்த மாநில இளைஞர்களின் முன்னேற்றத்தை பொறுத்தே நம் நாட்டின் எதிர்காலம் உள்ளது.

நன்றி:
தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்
17.3.2025

நாங்கள் எந்த மொழிக்கும் எதிரானவர்கள் அல்ல!

திணிப்பையும் ஆதிக்கத்தையும்தான் நாங்கள் எதிர்க்கிறோம்!

உ.பி. முதல்வர் தெரிவித்திருந்த கருத்தை அடுத்து - வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டவட்டம்!

சென்னை, மார்ச் 29-

மும்மொழிக் கொள்கை மற்றும் நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு ஆகியவற்றிற்கு தமிழ்நாடு எதிர்ப்பு தெரிவித்து வருவது குறித்து உத்தரப் பிரதேச மாநில முதலமைச்சர் அவர்கள் ANI செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டி தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், "நாங்கள் எந்த மொழிக்கும் எதிரானவர்கள் அல்ல! திணிப்பையும் ஆதிக்கத்தையும்தான் எதிர்க்கிறோம்" என்று விளக்க மளித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அந்த வலைதளப் பதிவு வருமாறு:-

இருமொழிக் கொள்கையிலும் நியாயமான மறுசீரமைப்பு கோரிக்கையிலும் தமிழ் நாட்டின் நியாயமான, உறுதியான குரல் இந்தியாவெங்கும் எதிரொலிக்கிறது. இதனால் பா.ஜ.க. நிலைகுலைந்து போயுள்ளது அப்பட்டமாகத் தெரிகிறது. வேண்டுமானால் அக்கட்சித் தலைவர்கள் அளிக்கும் நேர்காணல்களைப் பாருங்கள்.

அதிலும் தற்போது மாண்புமிகு திரு. யோகி ஆதித்யநாத் அவர்கள் வெறுப்புக் கூடாது என்று நமக்குப் பாடமெடுக்க வந்திருக்கிறார். வேண்டாம், வெறுப்பு பற்றி இவர் பேசுவது நகைமுரண் மட்டுமல்ல, அரசியலின் ஆகச்சிறந்த அவல நகைச்சுவை இது.

நாங்கள் எந்த மொழிக்கும் எதிரானவர்கள் அல்ல. திணிப்பையும் ஆதிக்கத்தையும் தான் எதிர்க்கிறோம்.

வாக்குகளுக்காகக் கலவரம் செய்வதல்ல எங்கள் அரசியல்! மாண்புக்கும் நீதிக்குமான உரிமைப்போர் எங்களுடையது!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (27.03.2025) அமைச்சர் பி. கீதா ஜீவன் தலைமையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மான்யக் கோரிக்கை மற்றும் துறை தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஜெயஸ்ரீ முரளிதரன், ஜானி டாம் வர்கீஸ், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் அலுவலர்கள், அத்துறையின் கீழ் பணிபுரியும் அனைத்து மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அரசின் தீன் தயாள் உபாத்யாய் இளைஞர்கள் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ்

தமிழ்நாட்டில் திறன் மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா?

மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 29-

ஒன்றிய அரசின் தீன் தயாள் உபாத்யாய் இளைஞர்கள் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்று மக்களவையில் திருவண்ணா மலை தொகுதி உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

மக்களவையில் கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை எழுப்பியுள்ள கேள்விகள் வருமாறு:-

தீன் தயாள் உபாத்யாய் இளைஞர்கள் வேலைவாய்ப்புத் திட்டம் (கிராமீன் கௌசல்யா யோஜனா) நாட்டில் செயல்படுத்தப்படுகிறதா, அப்படியானால், தமிழ்நாடு உட்பட மாநிலவாரியாக அதன் விவரங்கள் என்ன?

கடந்த மூன்று ஆண்டுகளில், மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள் வாரியாக, இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற நபர்களின் விவரங்கள் மற்றும் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

குறிப்பிட்ட காலகட்டத்தில், மாநிலம் மற்றும் யூனியன் பிரதேச வாரியாக, இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற பெண்களின் விவரங்கள் மற்றும் மொத்த எண்ணிக்கை தெரிவிக்கவும். பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு திட்டம் முடிந்த பிறகு வேலைவாய்ப்புகளை வழங்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள், (மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள் வாரியாக) என்ன?

ஆந்திரா மற்றும் தமிழ்நாடு உட்பட, குறிப்பாக சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில், மேற்படி திட்டத்தின் கீழ் திறக்கப்பட்ட பயிற்சி மையங்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்படும் பயிற்சி முறைகள் மற்றும் மேற்படி திட்டத்தின் கீழ், மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள் வாரியாக ஒதுக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட தொகையின் விவரங்கள் தெரிவிக்கவும்.

தமிழ்நாட்டில் கிராமப்புற இளைஞர்களுக்காக மேற்கூறிய திட்டத்தின் கீழ் ஏதேனும் சிறப்புக் கல்வி அல்லது திறன் மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் (மாநிலம் மற்றும் யூனியன் பிரதேச வாரியாக) குறிப்பிடவும்.

தொற்றுநோய்க்குப் பிறகும், பயிற்சித் திட்டம் முடிந்த பிறகும், இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கையிலும், நியமனங்கள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கையிலும் ஏதேனும் சரிவு காணப்பட்டதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இது தொடர்பாக அரசாங்கம் எடுத்த திருத்த நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பி இருந்தார்.

அதற்கு ஒன்றிய இணை அமைச்சர் டாக்டர் கும்மா தனுஜா ராணி விளக்கமாக பதிலளித்தார்.

மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமையில்

மயிலாடுதுறை மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய / நகர / பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

மயிலாடுதுறை மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய / நகர / பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற உள்ளது.

திராவிட முன்னேற்ற கழக பொறியாளர் அணி

இதில் பொறியாளர் அணிக்கு மயிலாடுதுறை மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய / நகர / பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : 30.03.2025 (ஞாயிற்றுக்கிழமை), நேரம் : காலை 10.00 மணிக்கு
இடம் : மாவட்ட கழக அலுவலகம் (கோர்ட் எதிரில்) மயிலாடுதுறை.

எஸ்.கே.பி.கருணா
மாநிலச் செயலாளர், தி.மு.க. பொறியாளர் அணி